

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.12.2024) முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் சிவசுப்பிரமணியன் அவர்களின் சென்னை, மேற்கு மாம்பலத்திலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, உடல்நலக்குறைவால் காலமான அவரது தந்தை தியாகராஜன் அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் 06.12.2024 அன்று சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, மருந்து, மாத்திரைகளின் இருப்பு குறித்து கேட்டறிந்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ஜெ.தேவிமீனாள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளனர்.

### ஒன்றிய அரசின்

# விவசாயிகளின் ஊக்க நிதித் திட்டம் முறையாக செயல்படுவதில்லை!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, டிச.18-**

**ஒன்றிய அரசின் விவசாயிகளுக்கான ஊக்க நிதித் திட்டம் முறையாக செயல்படுத்தப்படுவதில்லை என்று மக்களவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் பேசுகையில் குறிப்பிட்டார்.**

நாடாளுமன்ற மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் 2024-25ஆம் ஆண்டுக்கான துணை மானியங்களுக்கான கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு பேசியதாவது:-

இந்த 2024-25ஆம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் ஒன்றிய அரசு கூடுதல் செலவினமாக ரூ. 87,762.56 இந்த பேரவையின் ஒப்புதலுக்கு எடுத்துக் கொண்டது. இதில் ரூ.44,142 கோடி கூடுதல் செலவினங்களுக்கு இப்பேரவையில் ஒப்புதல் வேண்டியும் மீதமுள்ள ரூ.43,680 கோடி கூடுதல் செலவினம் ஒன்றிய அரசே மேற்கொள்ளும்.

ரூ.13,191 கோடி விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்திற்கும், ரூ. 6000 கோடி உரம், ரூ.12,000 கோடி தொலைத்தொடர்பு துறைக்கும், ரூ. 12,000 கோடி பாதுகாப்புத்துறைக்கும், ரூ.3000 கோடி வெளியுறவுத் துறைக்கும்

ரூ.6000 கோடி உள்துறை காவல்துறை செலவினங்களுக்கும் கேட்கப்பட்டுள்ளது.

எனது உரையில் விவசாயம் குறித்து கவனம் செலுத்த விரும்புகிறேன். ஒன்றிய அரசின் விவசாய அமைச்சகத்தின் கீழ் இரு துறைகள் உள்ளன. ஒன்று விவசாயம் மற்றும் விவசாயிகள் நலம் மற்றொன்று விவசாயக் கல்வி மற்றும் விவசாய ஆராய்ச்சிக்கானது. இந்த துறையில் பிரதமரின் விவசாயிகள் ஊக்கநிதி திட்டம் பயிர் காப்பீடு திட்டம் உட்பட ஒன்றிய அரசின் பல்வேறு விவசாய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**ஊக்க நிதி திட்டம் முக்கியமானது!**

இதில் பிரதமரின் விவசாயிகள் ஊக்கநிதி திட்டம் முக்கியமானது. பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு 2016 ஆண்டு 2022க்குள் விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பு ஆக்குவோம் என உறுதியளித்தது. இதற்காகவே 2019-ஆம் ஆண்டு பிரதமரின் விவசாயிகள் ஊக்க நிதி திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு மூன்று தவணையில் ரூ. 6000 வழங்குகிறது. ஆனால் இது முறையாக செயல்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை.



சி.ஏ.ஜி. எனும் மத்திய கணக்கு தணிக்கைத் துறையினர் அறிக்கை இத்திட்டத்தின் மொத்த பயனாளிகளில் 35 சதவீதம் பேர் இந்த நிதியுதவி பெறுவதற்கு தகுதி அற்றவர்கள் என கூறுகிறது. சில இடங்களில் இப்படி தவறாக வழங்கப்பட்ட நிதியுதவி மறுபடியும் திரும்பப் பெறும் பணி நடைபெறுகிறது. ஆனால் மொத்த நிதியில் வெறும் 0.24% மட்டுமே இதுவரை திரும்பப் பெற்றுள்ளது. இது இத்திட்டத்தின் செயல்பாட்டில் உள்ள பெரிய குறைபாடு ஆகும்.

மேலும் பிரதமரின் விவசாயிகள் ஊக்க நிதி திட்டமானது நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்படுவதால் 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறக்குறைய 5.37 கோடி நிலமற்ற விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைய முடியவில்லை. மேலும் 2.4 கோடி குத்தகை விவசாயிகள் இந்தத் திட்டத்தால் பயன் பெற முடியவில்லை என்பது பெருந்துயரமாகும்.

**தெளிவான தகவல் இல்லை!**

விவசாயத்துக்கான நாடாளுமன்ற நிலைக்குழு 2020 அறிக்கை படி இந்த பிரதமரின் விவசாயிகள் ஊக்க நிதி திட்டமானது செயல்படுத்துவதில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அதனால் இந்தத் திட்டத்தின் பயன் கோடிக் காணக்கான விவசாயிகளை சென்றடையாது. இந்த விவசாயிகள் ஊக்க நிதியுதவித் திட்ட செயலாக்கத்தில் நிறைய ஓட்டைகள் உள்ளதால் இதை சரியாக செயல்படுத்த முடியாது. நிலங்களின் சர்வே மற்றும் நில உரிமையாளர் குறித்த ஆவணங்கள் முழுமையாக இல்லை.

இறந்து போன நில உரிமையாளரிடமிருந்து மாற்றப்பட்ட தகவல் குறித்து தெளிவான தகவல் இல்லை. வடகிழக்கு மாநிலங்களில் சமூகத்துக்கு சொந்தமான நிலங்கள், தவறான நில ஆவணத் தகவல்கள், ஆதார் எண்கள் செயலாக்கத்தின் சரியின்மை போன்ற காரணங்களால் பிரதமரின் விவசாயிகள் ஊக்க நிதியுதவித் திட்டம் முறையாக செயல்படுத்த முடியாது என்று அவ்வறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயனை நிலங்கள் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்வோர் பெற இயலாது. ஏனெனில் அவர்களால் நிலத்துக்கு உரிமை கூற இயலாது. நாடாளுமன்ற மக்களவையில் உறுப்பினர் கேட்டு கேள்விக்கு அளித்த பதிலில் இந்த அரசு நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கை குறித்து எவ்வித கணக்கெடுப்பும் மேற்கொள்ளவில்லை. இது குறித்து சரியான விபரம் இல்லை என்று கூறியுள்ளது.

நிலைமை இப்படி இருக்க எப்படி ஒன்றிய அரசின் விவசாய நலன் திட்டம் வெற்றியடையும்? எப்படி ஒன்றிய அரசு அதிக செலவினங்கள் வேண்டும் என்று கேட்க முடியும்? நாட்டில் நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கை 5.31 கோடி பேர் உள்ளனர். அடுத்ததாக விவசாயிகளுக்கு கடன் அட்டை வாயிலாக வழங்கப்படும் விவசாயக்கடன் வழங்க ரூ. 18000 கோடியிலிருந்து ரூ.22,600 கோடியாக உயர்த்தியதாக கூறப்பட்டுள்ளது.

மற்றொரு முக்கியமான குறைபாடுள்ளது விவசாய பயிர் காப்பீடு திட்டம். இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.15,000 கோடியில் இருந்து 14,600 கோடியாக குறைந்தது (3%) இது சுற்றுச்சூழல் மற்றும் வானிலை மாற்றத்துக்காக ஒதுக்கீடு செய்தது. நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரை படி வானிலை மாற்றம் பாதிப்புகளை கருத்தில் கொண்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு அதைச் செய்யத் தவறிவிட்டது.

**விவசாயமே இந்நாட்டின் முதுகெலும்பு!**

விவசாயமே இந்நாட்டின் முதுகெலும்பாகும். தென்னிந்தியாவில் தமிழ்நாடு ஒரு முக்கிய விவசாய மாநிலமாகும். 1989 ஆண்டு தலைவர் மு.கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசு தான் இந்திய மாநிலங்களிலேயே முதன்முறையாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் செயல்படுத்திய மாநிலமாகும். இதையே நாட்டில் மற்ற மாநிலங்களும் பின்பற்றின. தற்போது தலைவர் கலைஞர் வழியில் சிறப்பான ஆட்சி செய்யும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விவசாயத்திற்கென தனி பட்ஜெட் தாக்கல் செய்து நாட்டில் முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது. இதன் வாயிலாக எண்ணற்ற விவசாய பெருங்குடி மக்களுக்கு நன்மைகள் பல செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் இதைப் பின்பற்ற வேண்டும். விவசாயம் தொடர்பாக தமிழ்நாடு அரசுக்கு ஏராளமான தேவைகள் கோரிக்கைகள் உள்ளன.

விதை மானியம் வழங்குவது அனைத்து விதைகளுக்கும் தரப்பட வேண்டும். நெற்மயிரா கம்பு சோளம் ஆகிய விதைகள் உற்பத்தி மானியம் அதிகரிக்க வேண்டும்.

**வெள்ளப் பாதிப்பு: தமிழ்நாட்டிற்கு நிவாரணம் வழங்குக!**

தமிழ்நாட்டில் வெள்ள பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்க நிவாரண நிதி கேட்டதற்கு ஒன்றிய அரசு பாராமுகம் காட்டுவது வருத்தம் அளிக்கிறது. விவசாயம் சார்ந்த தமிழ் நாட்டின் கோரிக்கைகளை ஒன்றிய அரசு புறக்கணிக்கிறது. ஒன்றிய அரசு அரிசி மீது விதிக்கும் 5% ஜிஎஸ்டி குறைக்க வேண்டும். தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்யும் கோதுமை அளவை அதிகரிக்க வேண்டும். ஆனால் 32000 மெட்ரிக் டன்னாக இருந்த கோதுமை ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. தமிழ்நாட்டுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவை அதிகரிக்க வேண்டும். மலைப்பகுதிகளுக்கு வழங்கும் ஒதுக்கீடு அதிகரிக்க வேண்டும். எந்த அரசு பதவிக்கு வந்தாலும் வேலை வாய்ப்பு அதிகரிக்க உறுதி அளிக்கின்றனர். ஆனால் இந்த அரசு பதவியேற்றது முதல் வேலைவாய்ப்பு அதிகரிக்க எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை.

நான் இந்தப் பேரவைக்கு இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு வேலூரில் விமான நிலையம் இயக்க வேண்டும் என்று போராடி வருகிறேன். அரசு நிதியும் ஒதுக்கீடு செய்து பணியும் நிறைவுற்றது. கடந்த தேர்தலில் பிரச்சாரம் செய்ய பிரதமர் நரேந்திர மோடி வேலூருக்கு வந்த போது வேலூர் விமான நிலையத்தில் வந்திறங்கினார். பிரச்சாரம் முடிந்தவு டன் வேலூர் விமான நிலையத்தில் இருந்து திரும்பி சென்றார். ஆனால் இன்று வரை வேலூர் விமான நிலையம் மக்கள் பயன்பாட்டுக்காக திறப்பு விழா நடத்தப்படவில்லை.

நிதியமைச்சருக்கு ஒரு முக்கிய கோரிக்கை. இந்தியாவில் ஏராளமான பணி ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் உள்ளனர். அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினர்களுக்கும் உரிய மருத்துவ சிகிச்சை அளிக்க பல தனியார் மருத்துவமனைகள் முன்வருவதில்லை. நாட்டுக்காக தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்க அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும்.

எனது உரையை முடிப்பதற்கு முன் நிறைவாக ஒன்றை இப்பேரவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். ஒன்றிய அரசு தமிழ்நாடு மாநிலத்தை ஒரு எதிரி மாநிலமாக கருதாமல் நாட்டின் உள்ள ஒரு மாநிலமாக கருத வேண்டும்.

இவ்வாறு டி.எம்.கதிர் ஆனந்த் பேசினார்.

### சின்னசேலம் - கள்ளக்குறிச்சி

# ரயில் பாதை பணிகளை விரைவுபடுத்துக!

## மக்களவையில் தே.மலையரசன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.18-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மக்களவையில் சின்ன சேலம் - கள்ளக்குறிச்சி ரயில் பாதை பணிகள் சுணக்கமாக நடைபெற்று வருவதாகவும் அதன் பணிகளை விரைவு படுத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

அதன் விபரம் பின்வருமாறு.



எனது கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கள்ளக்குறிச்சி, சேலம், தியாகதுருகம் மற்றும் ரிஷிவந்தியம், திருக்கோவிலூர் பகுதி மக்களின் கோரிக்கைகளுடன் எனது உரையை துவங்குகிறேன், எங்கள் கள்ளக் குறிச்சி மாவட்டம் 2019ல் புதிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டது, எங்கள் மாவட்டத்தில் 16 லட்சத்துக்கு மேல் மக்கள் வசித்து வருகிறார்கள், புதிய ரயில் பாதை அமைக்கும் வகையில் சின்னசேலத்தில் இருந்து கள்ளக்குறிச்சி வரை மாநில அரசுடன் சேர்ந்து கடந்த 2016ல் தொடங்கப்பட்டது, 8 வருடம் கடந்த நிலையில் இன்று வரை அந்தப் பணி சுணக்கமாக நடைபெற்று வருகிறது, அந்தப் பணிகளை மிக விரைவாக நடத்தி தர வேண்டும், அதே போல் முகையூர் வரை புதிய ரயில் பாதை அமைத்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன், இதனால் சென்னையிலிருந்து சேலம் வரை செல்லும் பயணிகள் நேரம் இரண்டு மணி நேரம் குறையும், எனவே பயணிகளின் நலன் கருதியும், எங்கள் மாவட்ட மக்களின் நலன் கருதியும் இந்த திட்டத்தை உடனே துவங்கு மாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்களின் தமிழக முதல்வர், கழகத் தலைவர், திராவிட நாயகர், சமூக நீதி காவலர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாடுடன் தமிழக மக்களுக்கு கட்சி பாகுபாடு இல்லாமல் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்.

அதுபோல் ஒன்றிய அரசும் அனைத்து மாநிலங்களுக்கும் பாகுபாடு இல்லாமல் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி தர வேண்டும் என்று மக்களவையில் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் வலியுறுத்தினார்.

### முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர்

# தி.சிவசுப்பிரமணியனின் தந்தை தியாகராஜன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச.18-**

**'முரசொலி' நாளேட்டின் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்கள் தந்தையார் வி.தியாகராஜன் அவர்கள் (வயது 100) நேற்று முன்தினம் (16.12.2024 - திங்கட்கிழமை) இரவு இயற்கையெய்தினார்என்பதைஅறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.**

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்

முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்களது தந்தையார் வி.தியாகராஜன் அவர்கள் உடல்நலக் குறைவால் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அன்னாரதுமறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது பிரிவால் வாடும் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தையை இழந்து வாடும் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டுஅவருக்குஆறுதலையும் தனது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

### நாகை அருகே கனமழையால் சுவர் இடிந்து விழுந்ததில் இறந்த

# மாணவன் கவியழகன் குடும்பத்திற்கு ரூ.4 லட்சம்நிதி உதவி!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்! என்.கௌதமன் – க.ராஜேந்திரன் பங்கேற்பு!

நாகை, டிச. 18 -

நாகை மாவட்டம், நாகை ஒன்றியம் செம்பியன்மகாதேவி கிராமம் விநாயகன் தோப்பை சேர்ந்த முருகதாஸ் விவசாயக் கூலித் தொழிலாளி இவரது மகன் கவியழகன், செம்பியன்மகாதேவி அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறார். 11.12.2024 இரவு பெய்த கனமழையில் சுமார் 11.45 மணியளவில் அவரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் அடிபட்டு கவியழகன் என்பவருக்கு இடது காதில் ரத்தக்கசிவு வரப் பெற்றது. மேலும் தந்தை முருகதாஸ், தாயார் லெட்சுமி, தங்கை சிவஸ்ரீ ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. உடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அனைவரும் ஒரத்தூர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். அப்போது மருத்துவர் பரிசோதித்ததில் கவியழகன், ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

முருகதாஸ், .லெட்சுமி, சிவஸ்ரீ ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்பினர். இதையடுத்து வீட்டின் சுவர் இடிந்து விழுந்து இறந்த கவியழகன் குடும்பத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.4,00,000க்கான காசோலையினை மாவட்டப் பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

நிகழ்ச்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்; நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ்,, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, நாகை தெற்கு ஒன்றியச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.இராஜேந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் மகாகுமார், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் கோ. அரங்கநாதன், நாகப்பட்டினம் வட்டாட்சியர் ராஜா, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கடலூர் ஊராட்சி ஒன்றியம் - மருதாடு, வெள்ளப்பாக்கம் பகுதிகளைச் சேர்ந்த

# 2000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வாகனம் மூலம் அனுப்பும் பணி!

## சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் தொடங்கி வைத்தார்!

கடலூர், டிச.18 -

பெஞ்சல் புயல் காரணமாக மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கி ஆறுதல் கூறி வந்த நிலையில் தொடர்ந்து நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார்.

இந்த நிலையில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஏற்பாட்டின் பேரில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருதாடு, வெள்ளப்பாக்கம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 2000 குடும்பத்தினருக்கு அரிசி, போர்வை, புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் நான்கு வாகனங்களில் அனுப்பும் பணி நடைபெற்றது.

இதனை தொடர்ந்து கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. வாகனங்களை அனுப்பி வைத்து அப்பகுதிகளைச் சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அந்தந்த குடும்பத்தினருக்கு முழுமையாக நிவாரணப் பொருட்கள் சென்றடைய வேண்டும் என அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர்கள் மகேஸ்வரி விஜயகுமார், சுமதி ரங்கநாதன்,

ஊராட்சி மன்றத் தலைவர்கள் மனோகர், தமிழரசி பிரகாஷ், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், முன்னாள் கவுன்சிலர் சேகர், ஆனந்த துரை, நிர்வாகிகள் சதீஷ், செந்தில், அய்யப்பன், அமர்நாத், மனோகர், ரஜினி, பீமன், பால்ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதல்வரின் பிறந்தநாளையொட்டி தருமபுரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர். சந்திரசேகரன் ஏற்பாட்டில் வெள்ளிசந்தையில் 300 ஏழை எளிய பெண்களுக்கு புடவைகளை தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழங்கினார். உடன் தொகுதி பொறுப்பாளர் அரியப்பன், ஒன்றிய கழகச்செயலாளர்கள் வழக்கறிஞர். எம்வீடி.கோபால், இல.கிருஷ்ணன், உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.